# கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2021

# Khelo India Youth Games 2021

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் கடந்த 2018ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டுகளில் 17 வயதிற்குட்பட்டவர்கள் மற்றும் 21 வயதிற்குட்பட்டவர்கள் என இரண்டு பிரிவுகளாக நடத்தப்பட்டு வந்தது. கோவிட்–19 பெருந்தொற்று காரணமாக கடந்த ஆண்டு போட்டிகள் நடத்தப்படாத நிலையில், 18–வயதிற்குட்பட்டர்களுக்கான பிரிவில், இவ்வாண்டு 05.02.2022 முதல் 14.02.2022 முடிய ஹரியானா மாநிலம் பஞ்சகுலா–வில் கீழ்க்காணும் விளையாட்டுக்களில் நடைபெற உள்ளது.

| | | | |
|---|---|---|---|
| வில்வித்தை | தடகளம் | இறகுபந்து | குத்துச்சண்டை |
| ஜிம்னாஸ்டிக்ஸ் | ஜூடோ | துப்பாக்கி சுடுதல் | நீச்சல் |
| பளுதூக்குதல் | மல்யுத்தம் | மேசைப்பந்து | டென்னிஸ் |
| கூடைப்பந்து | கால்பந்து | ஹாக்கி | கபாடி |
| கோ–கோ | கையுந்துபந்து | மிதிவண்டி | கைப்பந்து (போட்டிகள் நடத்தும் மாநிலத்தின் தேர்வு) |

மேற்காணும் போட்டிகளில், தமிழ்நாடு மாநில அணிகள் கீழ்க்காணும் குழு விளையாட்டுக்களில் கலந்து கொள்ள தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

1. கால்பந்து – பெண்கள்
2. ஹாக்கி – பெண்கள்
3. கோ–கோ – பெண்கள்
4. கூடைப்பந்து – ஆண்கள் மற்றும் பெண்கள்
5. கபாடி – ஆண்கள் மற்றும் பெண்கள்
6. கையுந்துபந்து – ஆண்கள் மற்றும் பெண்கள்

மாநில அளவிலான தேர்வுப் போட்டிகள் கீழ்க்காணும் விவரப்படி நடைபெற உள்ளது.

| வ. எண். | விளையாட்டு | நாள் | இடம் |
|---|---|---|---|
| 1. | ஹாக்கி – பெண்கள் | 06.12.2021 | எழும்பூர் மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம் |
| 2. | கபாடி – ஆண்கள் (ம) பெண்கள் | 06.12.2021 | நேரு உள் விளையாட்டரங்கம் |

| | | | |
|---|---|---|---|
| 3. | கையுந்துபந்து – ஆண்கள் | 07.12.2021 | நேரு உள் விளையாட்டரங்கம் |
| 4. | கையுந்துபந்து – பெண்கள் | 08.07.2021 | நேரு உள் விளையாட்டரங்கம் |
| 5. | கால்பந்து – பெண்கள் | 13.12.2021 | ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் / பி விளையாட்டுத் திடல் |

மேற்படி மாநில அளவிலான தேர்வுப் போட்டிகளில் கலந்து கொண்டு தேர்ந்தெடுக்கப்படும் விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு மாநிலத்தின் சார்பாக கலந்து கொள்வார்கள்.